தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திருப்பத்தூரில் 105 டிகிரி வெயில்



**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் செவ்வாய்க்கிழமை 105 டிகிரி வெயில் பதிவானது.

இதேபோல, மதுரை, பாளையங்கோட்டை, சேலம், திருச்சி, வேலூர் ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது. செவ்வாய்க்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்):

திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்) - 105

திருச்சி - 101

மதுரை, பாளையங்கோட்டை, வேலூர், சேலம் - 100

தருமபுரி - 99

கோவை - 97

சென்னை - 94

கொடைக்கானல் - 67

மழை வாய்ப்பு: இந்த நிலையில் வெப்ப சலனத்தின் காரணமாக தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த மூன்று நாள்களுக்கு ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**கோடை மழையால் ஆடுகளை துள்ளுமாரி நோய் தாக்க வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்**

**நாமக்கல்,**

பரவலாகப் பெய்து வரும் கோடை மழை காரணமாக, மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளை துள்ளுமாரி நோய் தாக்க வாய்ப்புள்ளது என்று நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (ஏப்.16 முதல் 18-ஆம் தேதி வரை) வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன், 18-ஆம் தேதி சில இடங்களில் 2 மிமீ வரை மழை பெய்யவும் வாய்ப்புள்ளது. காற்றின் திசைவேகம் மணிக்கு 4 கிமீ முதல் 6 கிமீ வேகத்தில் தெற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 77 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 102.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 24 சதம் முதல் அதிகபட்சம் 69 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு...: தற்போது நிலவும் லேசான மேகமூட்டத்தால் அதிகபட்ச பகல் நேர வெப்ப அளவு 102.2 டிகிரி பாரன்ஹீட்டை ஒட்டியே நிலவ வாய்ப்புள்ளது. தவிர, பகல் வெப்பநிலை மாலையில் சுமார் 2.30 முதல் 5.30 மணி வரை 100.4 டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேல் தொடர்ந்து நிலவுவதால், கோழிகளிடையே வெப்ப அயற்சி ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே, தொடர்ந்து வெப்ப அயற்சியைக் குறைக்க வைட்டமின் சி, எலக்ட்ரோலைட்ஸ் மருந்துகளை தீவனத்தில் சேர்த்து வர வேண்டும். மேலும், குளிர்ந்த குடிநீர் நாள் முழுவதும் கோழிகளுக்கு கிடைக்கவும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு...: தற்போது பரவலாக மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. இதனால், மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்கு செல்லும் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்த நோய் எல்லா வயது ஆடுகளையும் பாதிப்பதைவிட இளம்வயது ஆடுகளையே பெரும்பாலும் பாதிக்கிறது. சூரிய உதயத்துக்கு 2 மணி நேரத்துக்குப் பின் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும். பருவ மழைக்கு முன்பு தடுப்பூசி போடுவதும் அவசியமாகும்.

நாமக்கல் மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதால், மானாவரி விவசாயிகள் தங்கள் வயலுக்கு எரு இட்டு ஓரிரு உழவை மேற்கொள்ளலாம். மேலும், தாற்காலிகமாக நீர்நிலைகளை சரி செய்து கிடைக்கும் மழைநீரைச் சேகரிப்பதன் மூலம் பயிர் வளர்ச்சி நிலையில் நீர்ப்பாசனம் செய்ய உறுதுணையாக இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கிருஷ்ணா கால்வாயில் நீர்வரத்து உயர்வு**

**திருவள்ளூர்,**

ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து கிருஷ்ணா கால்வாய் வழியாக வரும் தண்ணீரின் அளவு செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி 310 கனஅடியாக உயர்ந்துள்ளது.

தமிழக பொதுப்பணித் துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் கடந்த 15 தினங்களுக்கு ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையில் இருந்து வினாடிக்கு 600 கன அடியாக திறக்கப்பட்டு கிருஷ்ணா கால்வாய் வழியாக முதலில் வினாடிக்கு 15 கன அடியாக வந்து சேர்ந்தது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி கிருஷ்ணா கால்வாயில் வினாடிக்கு 310 கனஅடியாக நீர்வரத்து உயர்ந்துள்ளது. நீரின் அளவு 500 கன அடியை எட்டியப் பின்னரே பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயரும் என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கறிக்கோழி கொள்முதல் விலையில் மாற்றம் இல்லை**

**பல்லடம்,**

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. திங்கள்கிழமை கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.78 ஆக இருந்தது. விற்பனையில்

மாற்றம் எதுவும் இல்லாததால் செவ்வாய்க்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டைக் கோழி கிலோ ரூ.47. முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.66, சென்னையில் ரூ.3.

## சேவூர் ஏலத்தில் நிலக்கடலை வரத்துக் குறைந்தது

**அவிநாசி,**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில், வரத்து குறைந்து ரூ. 3.20 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. இந்தவாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, நிலக்கடலை 400 மூட்டைகள் வந்திருந்தன. சென்ற வாரத்தை விட 300 மூட்டைகள் குறைவாக வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக (காய்ந்த) நிலக்கடலை ரூ. 3,820 முதல் ரூ. 4,000 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,320 முதல் ரூ. 3,530 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 3.20 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 7 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 35 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர். சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் அழகிரி சாந்தலிங்கம் (பொறுப்பு) கூறுகையில், சித்திரைத் திருநாளை முன்னிட்டு சென்ற வாரத்தை விட 300 மூட்டைகள் வரத்து குறைவாக இருந்தது. அடுத்த வாரம் மூட்டைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இருப்பினும் சென்ற வாரத்தை விட குவிண்டாலுக்கு ரூ. 150 வரை விலை அதிகரித்திருந்தது என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 45.53 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 45.53 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 533

கனஅடி நீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் 150 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,300 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 2.9. டி.எம்.சி.

**ஆசனூர் மலைப்பகுதியில் பீட்ரூட் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம்**

**சத்தியமங்கலம்,**

சத்தியமங்கலம் ஆசனூர் மலைப்பகுதியில் கேரட், பீட்ரூட் போன்ற காய்கறிகளை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

உதகை, கோத்தகிரி, குன்னூர் போன்ற குளிர் பிரதேசப் பகுதியில் விளையும் கேரட், பீட்ரூட் உள்ளிட்ட காய்கறிகள் தாளவாடி, ஆசனூர், தலமலை பகுதியிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. கேரட், பீட்ரூட், காலிஃபிளவர் போன்ற மலைக் காய்கறி பயிர்கள் மிகவும் குளிர்ந்த சூழலும் அதிக வெப்பமில்லாத இடங்களில் வளரும் தன்மையுடையது.

மூன்று மாத பயிரான பீட்ரூட், ஏக்கர் ஒன்றுக்கு 20 டன் முதல் 25 டன் வரை மகசூல் கிடைக்கிறது. உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வதால் விவசாயிக்கு உடனடியாக பலன் கிடைக்கிறது. இதனால் மக்காச்சோளம், முட்டைகோஸ் சாகுபடி விவசாயிகள் பீட்ரூட் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆசனூர், தலமலை பகுதியில் சில நாள்களாக பெய்த கோடை மழையை பயன்படுத்தி விவசாயிகள் நிலத்தை உழுது நிலத்தை சமப்படுத்தி வருகின்றனர். சில இடங்களில் கிணற்று பாசனம் மற்றும் ஆழ்குழாய் கிணறு வசதி உள்ள விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி ஸ்பிரிங்லர் முறையில் நீர் பாய்ச்சி பீட்ரூட் சாகுபடி செய்து வருகின்றனர். பீட்ரூட் செடிகள் ஓரளவு வளர்ந்த நிலையில் களையெடுப்பு பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

**மாரண்டஅள்ளியில் 33 மி.மீ மழை**

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், மாரண்டஅள்ளியில் திங்கள்கிழமை இரவு 33 மி.மீட்டர் அளவு மழை பொழிந்தது. தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் அதிக அளவு உள்ளது. இந்த நிலையில், கடந்த

நான்கு நாள்களாக மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இரவு நேரங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்து வருகிறது.

இதில் திங்கள்கிழமை இரவு மாரண்டஅள்ளி பகுதியில் 33 மி.மீட்டர் மற்றும் ஒகேனக்கல் பகுதியில் 22.30 மி.மீட்டர் அளவு மழை பெய்தது.

## முட்டை விலை

**நாமக்கல்,**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.66, சென்னையில் ரூ.3.

கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.78, முட்டைக் கோழி கிலோ ரூ.47.

## சேலத்தை குளிர்வித்த கோடை மழை

**சேலம்,**

சேலம் மாநகரில் தொடர்ந்து கொளுத்தும் கோடை வெயிலுக்கு இடையே, செவ்வாய்க்கிழமை பெய்த கோடை மழை நகரைக் குளிர்வித்தது. சேலத்தில் மார்ச் இரண்டாவது வாரத்தில் இருந்து கோடை வெயில் மக்களை வாட்டி வதைத்து வருகிறது. தினசரி சராசரியாக 100 டிகிரிக்கும் அதிகமான வெயில் பதிவாகிறது. இதனால், பகல் நேர நடமாட்டத்தை பொதுமக்கள் குறைத்துக் கொண்டு, வீடு, அலுவலகங்களில் முடங்கிக் கிடக்கும் நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்பு சேலத்தில் கோடை மழை பெய்தது. இருப்பினும் சிறிது நேரமே மழை பெய்ததால் மக்கள் ஏமாற்றம் அடைந்தனர். ஆனால், மக்களை மகிழ்விக்கும் விதமாக செவ்வாய்க்கிழமை மாலை சுமார் ஒரு மணி நேரம் மழை பெய்தது. மாலை 4.15 மணியளவில் தொடங்கிய மழை, 5 மணிக்கு பிறகும் விட்டு விட்டு பெய்தது. இதனால், சாலைகளில் மழை நீர் தேங்கியது. கோடை வெயிலால் இரவிலும் வெப்பமான

காற்று வீசி வந்த நிலையில், செவ்வாய்க்கிழமை பெய்த மழையால் குளிர்ந்தக் காற்று வீசியது.

## கடலூரில் மீன்பிடி தடைக்காலம் தொடங்கியது: கரைக்கு திரும்பிய விசைப்படகுகள்

**கடலூர்,**

வங்கக்கடலில் மீன்களின் இனப்பெருக்கத்துக்காக 45 நாள்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்க அரசு விதித்துள்ள தடைக்காலம் செவ்வாய்க்கிழமை (ஏப்ரல் 15) தொடங்கியது. இதனால் கடலூர் மாவட்டத்தில் உள்ள விசைப்படகுகள் கரைக்குத் திரும்பின.

வங்கக்கடலில் ஏப்ரல், மே மாதங்களில் மீன்களின் இனப்பெருக்கம் அதிகம் நடைபெறும். இக்காலங்களில் மீன்கள் கடலுக்கு அடியில் உள்ள பாறைகளில் முட்டையிட்டு குஞ்சுகள் பொரிக்கும். விசைப்படகுகள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது படகுகள் மற்றும் வலைகளில் அடிபட்டு மீன் குஞ்சுகள் அழியும் நிலை உள்ளது.

இதை கருத்தில் கொண்டு, ஆண்டுதோறும் ஏப்ரல் 15-ம் தேதி முதல் மே 29-ம் தேதி வரை ஆழ்கடலில் சென்று மீனவர்கள் மீன்பிடிக்க மத்திய அரசு தடை விதித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி, ஆந்திர மாநிலங்களில் இத்தடை திங்கள்கிழமை (ஏப்ரல் 15) முதல் அமலுக்கு வந்தது. மீன்பிடி தடைக்காலம் அமலுக்கு வந்ததால் கடலூர் மாவட்டத்தில் நல்லவாடு முதல் தாண்டவராயன் சோழகன்பேட்டை வரை உள்ள 45 மீனவ கிராமங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்படுவர்.

இதன் காரணமாக அரசு மீன்பிடித் தடைக்காலங்களில் மீனவர்களுக்கு ரூ. 2 ஆயிரம் நிவாரணம் வழங்கி வருகிறது. இக்காலங்களில் மீனவர்கள் படகு என்ஜின், புரொபெல்லர்கள் பழுது பார்த்தல், வர்ணம் தீட்டுதல், வலைகள் பின்னுதல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுவர்.

மீன் விலை உயர வாய்ப்பு:

மீன்பிடி தடைக் காலங்களில் மீனவர்கள் கடற்பரப்பில் 14 நாட்டிக்கல் மைல் தொலைவு வரை மட்டுமே கட்டுமரம் மற்றும் பைபர் படகுகளில் சென்று மீன்பிடித்து வர முடியும்.

இதனால் தமிழகத்தில் மீன் தட்டுப்பாடு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை ஈடுகட்ட வெளி மாநிலங்களில் இருந்து மீன்கள் இறங்குமதியாகும் சூழல் உள்ளதால் மீன் விலை உயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

மீன்பிடி தடை காரணமாக, மாவட்டத்தில் உள்ள 742 விசைப்படகுகள், பைபர் படகுகள் அடுத்த 45 நாள்களுக்கு கரைகளில் ஓய்வெடுக்க உள்ளன.

கடைசி நாளில் கிடைத்த மத்தி மீன்கள்:

மீன்பிடி தடைக்காலம் செவ்வாய்க்கிழமை தொடங்கியதால், திங்கள்கிழமை வரை கடலுக்குள் தங்கி மீன்பிடித்த விசைப்படகு மீனவர்களுக்கு சுமார் 20 டன் அளவுக்கு மத்தி மீன்கள் கிடைத்தன. முக்கியமாக கேரளத்துக்கு அனுப்பப்படும் இந்த வகை மீன்களுக்கு அங்கு நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வரும் மே 29-வரை விசைப்படகுகள் மூலம் கடலில் மீன்பிடிக்கத் தடை**

**விழுப்புரம்,**

கடலில் மீன்வளத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் விழுப்புரம் மாவட்டத்துக்கு உள்பட்ட கடலோரப் பகுதிகளில் மீன்பிடிக்க தடை விதித்து மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம்:

கடலில் மீன்வளத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் தமிழக கிழக்கு கடற்கரை நெடுகிலும் உள்ள பகுதி முழுவதிலும் (திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம் வரை) ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்ரல் 15-ம் தேதி முதல் மே 29-ம் தேதி வரை முதல் 45 நாள்களுக்கு விசைப்படகுகள் மற்றும் இழுவலை படகுகள் மூலம் மேற்காணும் தடை செய்யப்பட்ட 45 நாள்களுக்கும் கடலில் சென்று மீன்பிடிக்க வேண்டாம் என விழுப்புரம் மாவட்ட மீனவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கடலில் மீன்கள் இனவிருத்திக்கு ஏற்ற காலமான மேற்கண்ட 45 நாள்கள், மீனவர்கள் கடலில் மீன்பிடிப்பதை நிறுத்தி வைப்பதன் மூலம் இடையூறு இல்லாத இனவிருத்தி மேம்பட்டு, மீன்வளம் பெருக

வாய்ப்புள்ளதால் மீனவர்கள் நலன் கருதி அரசு வகுத்துள்ள இத் தடை ஆணையின்படி மேற்குறிப்பிட்டுள்ள 45 நாள்கள் முடியும் வரை இம் மாவட்ட மீனவர்கள் விசைப்படகுகள் மற்றும் இழுவலைப் படகுகள் மூலம் மீன்பிடிக்க வேண்டாம் என்று அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நல்ல வருமானம் தரும் கீரை சாகுபடி**



கீரை சாகுபடியில் நிலத்தை தயார் செய்வதற்கு நல்ல கவனம் தர வேண்டும். நிலத்தை நன்கு உழுது கட்டிகள் இல்லாமல் செய்து அவைகளில் பாத்திகளை தயார் செய்து கொள்ளலாம். பாத்திகளின் அளவு நமது நிர்வாகத் திறமைக்கு ஏற்றபடி 8 சென்ட் முதல் 10 சென்ட் உள்ளபடி செய்து கொள்ளலாம். கீரை சாகுபடிக்கு அதிகம் தேவைப்படுவது நன்கு மக்கிய தொழு உரமாகும். இந்த எருவினை நன்கு மக்க வைப்பது இரண்டு காரணங்களுக்காக அவசியம் ஆகிறது.

1. எரு நன்கு மக்காமல் இருந்தால் அதில் களைச்செடிகளின் விதைகள் மடியாமல் இருந்து இதனை பாத்தியில் போடும்போது அதிக அளவில் களைச்செடிகள் முளைத்து விடும்.

2. எரு நன்கு மக்காமல் இருப்பின் அதிலுள்ள ஊட்டச்சத்துக்கள் செடிகளுக்கு உடனே கிடைக்காது. மேலும் எரு நன்கு மக்கியிருக்கும்போது இதை இடும் இடத்தில் மண் இளக்கமாக இருக்கும். அதோடு எரு இட்ட இடத்தில் வடிகால் வசதி நன்றாக இருக்கும். இயற்கை எருவினை சாகுபடி காலத்திற்கு முன்பாகவே சேகரித்து வைத்துக் கொண்டு அதன் மேல் சூரியஒளி படாமல் பாதுகாக்க

வேண்டும். எருவினை சமயம் கிடைக்கும்போது கட்டி இல்லாமல் பொடி செய்து குவித்து வைத்து ஓலைகளைக் கொண்டு மூடி வைத்துக் கொள்ள வேண்டும். இதோடு வளமான செம்மண் மற்றும் மணல் இவைகளையும் சேகரித்து வைத்துக் கொண்டு பாத்தியில் சாகுபடி செய்யும் சமயம் இவைகளை எருவுடன் கலந்து இடலாம். வசதி கிடைக்கும்போது குளத்து வண்டல் மண்ணினை சேகரித்து இதனுடன் எருவினை நன்கு கலந்து சாகுபடி செய்யும் பாத்திகளுக்கு இடலாம். எருவினை பாத்தியில் போட்டால் மட்டும் போதாது. அவைகளை சாகுபடி செய்யும் நிலங்களுக்கு இட்ட உடனே பாத்தியை நன்கு கொத்தி விட வேண்டும். அப்போது தான் எரு நன்கு மண்ணோடு கலந்து கீரை செடிகளை தளதளவென்று வளர வைக்கும். கீரை சாகுபடியில் முடிந்தவரையில் இயற்கை உர உதவியுடன் செய்வது நல்லது. இருப்பினும் தொடர்ந்து ஒரே இடத்தில் கீரை சாகுபடி செய்து வருவதால் இயற்கை உரங்களோடு தேவையான அளவு ரசாயன உரங்களை இடலாம். கீரை சாகுபடி செய்பவர்கள் நிலத்திற்கு தேவையான இயற்கை எருக்களை தாங்களே தயார் செய்கிறார்கள். குடும்ப நபர்களே தங்கள் நிலத்தில் வேலை செய்வதால் வேலைக்கு கூலி ஆட்களை வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

**கீரை சாகுபடி** : சாகுபடி செய்யும் கீரை முளைக்கீரையாக இருக்கலாம். சிறு கீரையாக இருக்கலாம். இவைகளின் வயது 24 நாட்களாக இருக்குமா என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். விதை விதைத்த 21,22,23,24 நாட்களில் கீரைச்செடிகளை வேரோடு பிடுங்கலாம். ஒரு நாளைக்கு 300 கட்டுகள் கீரை கிடைக்கும். எட்டு சென்ட் நிலத்தில் ஒரு கிலோ விதையை விதைக்கலாம். ஒரு கிலோ விதையின் விலை ரூ.1,000. எட்டு சென்ட் பரப்பில் நான்கு அறுவடைகளில் ஒரு நாளைக்கு 300 கட்டுகள் வீதம் 1,200 முளைக்கீரை, அரைக்கீரை கட்டுகள் கிடைக்கும். ஒரு கட்டின் விலை ரூ.10. கீரை சாகுபடியில் செய்பவர்களின் குடும்பமே நிலத்தில் பணி செய்கின்றது. கீரை சாகுபடி செய்பவர்கள் பாத்திகளை அழகாகப் போட்டு மண்ணை மேடு பள்ளம் இல்லாமல் சமமாக செய்கிறார்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் நிலத்தில் பாடுபட்டு உழைத்து கீரை சாகுபடி செய்கின்றனர். அவர்களே கீரைகளின் வேர்களில் மண் ஒட்டாமல் தண்ணீரில் அலசி சுத்தம் செய்து கட்டுகளை நேர்த்தி செய்கிறார்கள். குடும்ப நபர்களே ஈடுபடுவதால் சாகுபடி செலவு அதிகம் இல்லை. அறுவடையான கீரையை மார்க்கெட்டிற்கு எடுத்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

விற்பனை பிரச்னை எதுவும் இல்லை. சாகுபடி நிலத்திலும், விவசாயி வீட்டிற்கும் நுகர்வோர்கள் வந்து கீரையை விலைக்கு வாங்கி செல்கிறார்கள். ஒரு விவசாயி மூன்று மாதங்கள் முளைக்கீரை, சிறு கீரை சாகுபடி செய்தால் கீரை விதை விலை ரூ.1,000 போக ரூ.20,000 நிச்சயமாக லாபம் எடுக்கலாம். கீரை சாகுபடி செய்பவர்கள் பாடுபட்டு உழைத்து ஊட்டச்சத்துக்கள் மிகுந்த கீரையை நமக்கு அளிக்கிறார்கள்.

**முள்ளங்கி சாகுபடி:** கீரை சாகுபடி செய்பவர்கள் முள்ளங்கியையும் சாகுபடி செய்கிறார்கள். 5 சென்ட் நிலத்தில் 300 கிலோ மகசூல் கிடைக்கும். முள்ளங்கியின் மதிப்பு ரூ.3,000. சாகுபடி செலவு ரூ.500 போக நிகர லாபமாக ரூ.2,500 கிடைக்கும். இதில் கிடைக்கும் லாபத்தை விவசாயிகள் மறுபடியும் கீரை சாகுபடிக்கு உபயோகிக்கின்றனர்.

## சின்ன சின்ன செய்திகள்




**பேரிக்காய் ஊட்டி 1 :** உதகமண்டலத்தில் செயல்பட்டு வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் இதுவரை புஷ்பீன்ஸ், ரோஸ்மேரி, தைம், செலரி, சக்கரவர்த்தி கீரை, பாலக்கீரை, காலிபிளவர் உள்ளிட்ட 14 பயிர் இரகங்களை வெளியிட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையத்தின் 15 ஆவது வெளியீடான மெது பேரி ஊட்டி 1 இரகம் இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. வெண்ணையைப் போன்ற மிருதுவான சதைப்பற்றுடன் நறுமணம் கொண்ட நீண்ட வடிவிலான பழங்களை உடைய இந்த இரகத்தை ஜூன்-ஜூலை மாதங்களில் நடவு செய்யலாம். நட்ட 5வது ஆண்டிலிருந்து விளைச்சலைத் தரும். இந்த இரகம் ஏப்ரல், மே மாதங்களில் (குறிப்பாக ஊட்டிக்கு சுற்றுலா பயணிகள் வரும் காலகட்டத்தில்) அறுவடைக்கு வருவதால் சந்தையில் மிக நல்ல விலை கிடைக்கிறது. ஒரு மாதத்திற்கு 97 கிலோ காய்களை தரவல்லது. ஜாம், ஊறுகாய்,

பழ ரசம் போன்ற மதிப்பூட்டம் செய்யப்பட்ட பொருள்களைத் தயாரிக்கலாம். இந்த இரகத்தின் பழங்களில் அதிக அளவு கால்சியம், சோடியம், பொட்டாசியம், அஸ்கார்பிக் அமிலம், மாவுச்சத்து, நார்ச்சத்துக்கள் உள்ளன. நீலகிரி மாவட்டம், ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கொடைக்கானல் பகுதிகளில் பயிரிட ஏற்ற இந்த இரகம் அசுவினிப்பூச்சி, தீக்கருகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. மேலும் விபரங்களுக்கு: ""முதன்மையர், தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422 -661 1270.

மரவள்ளிக்கிழங்கைத் தோண்டும் கருவி: பண்ணைப் பணியாளர்களின் பற்றாக்குறையை போக்க இயந்திரம் மூலம் விதைப்பு, களையெடுப்பு, அறுவடைக்கருவிகள் என இதுவரை த.வே.ப.கழகம் 100 கருவி இயந்திரங்களை வெளியிட்டுள்ளது. மரவள்ளிக்கிழங்கைத் தோண்டும் இப்புதிய கருவியை 50 குதிரைத்திறன் கொண்ட டிராக்டரில் இணைத்து பயன்படுத்தலாம். ஒரு வரிசையாக இருந்தால் நாள் 1க்கு 0.7 எக்டரும், இரண்டு வரிசையாக இருந்தால் நாள் 1க்கு ஒரு எக்டர் வரையும் அறுவடை செய்யலாம். இக்கருவியின் விலை 32,000 ரூபாய் இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள இந்த கருவியை விவசாயிகள் பயன்படுத்தி லாபம் ஈட்டலாம். டிராக்டரால் இயங்கும் ஒரு/இருவரிசை மரவள்ளிக்கிழங்கைத் தோண்டும் இந்தக்கருவி பற்றிய மேலும் விவரங்களுக்கு தொடர்பு முகவரி: ""முதன்மையர், வேளாண் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422 - 661 1253.

**இஞ்சியைத் தாக்கும் குருத்து துளைப்பான் பூச்சியைக் கட்டுப்படுத்த :** பூச்சி தாக்காத நல்ல விதை கிழங்குகளைத் தேர்வு செய்து சேமிக்க வேண்டும். விதைக்கிழங்குகளை டைகுளோரிவாஸ் 2 மி.லி.

அல்லது மோனோகுரோட்டோபாஸ் 1.5 மி.லி. 1லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து அக்கரைசலில் நனைய வைத்து நிழலில் உலர்த்திய பிறகு நடுதல் வேண்டும். தாக்கப்பட்ட குருத்து, கிழங்கைச் சேகரித்து அழிக்க வேண்டும். மோனோ குரோட்டோபாஸ் 2.0 மி.லி. அல்லது குளோன்பைரிபாஸ் 2 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். (தகவல்: முனைவர் சு.இருளாண்டி, முனைவர் ம.இ.மணிவண்ணன், முனைவர் ஜே.ஜேன் சுஜாதா, வேளாண்மை அறிவியல் நிலையம், பேச்சிப்பாறை -629 161, கன்னியாகுமரி

மாவட்டம். போன்: 04651 - 181 191. செல்: 94432 81191, 94438 45159.
**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**ஊசி ஈ**



பட்டுக்கூடுகளை சேதப்படுத்தி பட்டு விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்தி பட்டுப்புழுவில் ஒரு ஒட்டுண்ணி வாழ்க்கை வாழும் ஒரு வகை பூச்சி இனமே இந்த ஊசி ஈ. இதன் பெயர் எக்ஸோரிஸ்டா பாம்பிசிஸ் 1980ல் மேற்கு வங்காள மாநிலத்தில் இருந்து கர்நாடகா மாநிலத்திற்கும் பின் அங்கிருந்து தமிழ்நாடு, ஆந்திரா என பரவலாக தென்பட ஆரம்பித்தது. 1982ல் ஊசி ஈயின் தாக்குதல் அதிகமாக இருந்ததை தெரிந்து கொண்ட பிறகு ஊசி ஈயை கட்டுப்படுத்த பலவிதமான தடுப்பு முறைகள் பட்டுப்புழு வளர்ப்பில் கையாளப்பட்டது. ஊசி ஈ தன் வாழ்நாளில் 500 - 600 முட்டைகள் வரை இடும். ஒரு ஈ ஒன்று அல்லது இரண்டு முட்டைகள் மட்டுமே ஒரு புழுவில் மேல் இடுகின்றது. இவை 2-3 நாட்களில் புழுக்களாக மாறி பட்டுப்புழுவின் உடலுக்குள் சென்று 5-8 நாட்கள் வரை ஒட்டுண்ணி வாழ்க்கை வாழ்ந்து விட்டு பின் பட்டுப்புழுவின் உடலை துளைத்து கொண்டு வெளியே வந்து விடுகின்றது. இதனால் பட்டுப்புழுவின் வளர்ச்சி தடை படுகின்றது. வெளியே வரும் புழுக்கள் 15-20 மணி நேரத்தில் கூட்டுப்புழுவாக மாறி 10-12 நாட்கள் கூட்டுப்புழுவாக இருந்து பின் ஊசி ஈயாக வெளிவருகின்றது. வெளியே 13-20 நாட்கள் வரை வாழும் பெண் ஊசி ஈ, 2வது நாளில் இருந்து முட்டை இட ஆரம்பிக்கின்றது.

ஊசிஈ தாக்குதலுக்கு உள்ளான பட்டுப்புழுக்களின் மேல் கறுப்பு நிறத்தழும்புகளும் பட்டுக்கூடுகளில் சிறிய துவாரம் காணப்படும். இது தான் ஊசி தாக்குதலின் அறிகுறியாகும். இளம் புழு பருவத்தில் தாக்குதல் இருந்தால் புழுக்கள் கூடுகட்டும் முன்பே இறந்து விடுகின்றன. முதிர்நிலை பருவத்தில் இதன் தாக்குதல் இருந்தால்

மெல்லிய கூடுகளும் அல்லது நூற்புக்கு உதவாத கூடுகள் மற்றும் எடைகுறைவான கூடுகளும் உண்டாகும். இதனால் பட்டுக்கூடுகளின் தரம் குறைவதோடு நல்ல விலையும் கிடைக்காமல் போய்விடுகின்றது. அதனால் தகுந்த பாதுகாப்பு மேலாண்மை செய்யவில்லை எனில் பொருளாதார இழப்பு அதிகமாக இருக்கும் (>20%)

**பாதுகாப்பு மேலாண்மை:** புழு வளர்ப்பு மனையில் நுழைவு வாயிலில் ஒரு முகப்பு அறை நைலான் வலையில் அமைக்க வேண்டும். புழு வளர்ப்பு அறை முழுவதும் நைலான் வலையால் பாதுகாப்பு செய்ய வேண்டும். ஜன்னல் மற்றும் காற்றோட்டத்திற்காக புழு வளர்ப்பு மனையில் அமைத்திருக்கும் பகுதி கள் எல்லாம் நைலான் வலையால் மூடப்பட்டிருக்க வேண்டும். தண்டுடன் கொண்டு வரும் மல்பெரி இலைகளில் ஊசிஈ இல்லை என்று உறுதி செய்த பின்பே புழு வளர்ப்பு மனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

**ஊசிஈ பொறி :** ஊசிஈ மாத்திரையை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து வெள்ளை நிற பிளாஸ்டிக் தட்டுகளில் ஊற்றி கதவு மற்றும் ஜன்னல் பகுதிகளில் தரையில் இருந்து 3 அடி உயரத்தில் வைக்க வேண்டும்.

**ஒட்டுப்பசை:** பல்லி, எலி, கரப்பான் பூச்சி போன்றவற்றை பிடிப்பதற்காக கடைகளில் ஒரு ஒட்டுப்பசை அட்டை விற்கப்படுகின்றது. இதை சிறிய கஙஇ பைப்புகளில் தடவி புழு வளர்ப்பு மனை வெளிப்பகுதியில் ஆங்காங்கு கட்டி தொங்க விடும் போது பறந்து வரும் ஊசிஈ இதில் ஒட்டிக் கொள்கின்றது.

**ஊசி பவுடர்:** இது ஊசி ஈயை முட்டை பருவத்திலேயே அழித்து விடும் தன்மையுடையது. 100 முட்டை தொகுதிக்கு 4 கிலோ பவுடர் தேவைப்படும். மூன்றாம் பருவத்தில் இருந்து இந்த பவுடரை பயன்படுத்தலாம். பவுடரை தூவி அரை மணி நேரம் கழித்து உணவு அளிக்க வேண்டும். ஒவ்வொரு பருவத்திலும் தோலிலிருந்து வந்த பின் 2ம் நாளிலிருந்து ஒருநாள் விட்டு இதை தூவ வேண்டும்.

**உயிரியல் முறை:** உயிரியல் முறையில் ஊசிஈயை கட்டுப்படுத்த நிஸோலின்க்ஸ் தைமஸ் என்ற ஒட்டுண்ணியை பயன்படுத்தலாம். இது ஊசிஈயின் கூட்டுப்புழுக்களில் முட்டை இட்டு அதை கூட்டுப்புழு பருவத்திலேயே அழித்து விடுகின்றது. 100 ஊசி ஈயின் முட்டைத் தொகுதிகளுக்கு 2 பைகள் என்ற அளவில் ஐந்தாம் பருவத்தில் 2வது நாளில் புழு வளர்ப்பு தாங்கிகளில் கட்ட வேண்டும். இந்த முறைகளை எல்லாம் தொடர்ந்து கடைபிடிக்கும் போது ஊசிஈக்களின் தாக்குதல் படிப்படியாக குறைந்து விடும்.

**டி.சிவசுப்ரமணியன், ஏ.ஞானகுமார் டேனியல், விஞ்ஞானிகள்,**
**ஆராய்ச்சி விரிவாக்க மையம்,**
**மதுரை-625 402.**

**'தமிழகத்தில் கோடை மழை சில தினங்களுக்கு நீடிக்கும்'**

**சென்னை**: மழைக்கு அதிக வாய்ப்பில்லை எனக் கூறி வந்த, சென்னை வானிலை ஆய்வு மையம், 'தமிழகத்தில், ஆங்காங்கே பெய்து வரும் கோடை மழை இன்னும் சில தினங்களுக்கு தொடரும்' என, நேற்று தெரிவித்து உள்ளது.

வெப்பச்சலனம் மற்றும் காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக, கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக, தமிழகம், கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திராவில், ஆங்காங்கே கோடை மழை பெய்து வருகிறது. நேற்று முன்தின நிலவரப்படி, கோடை மழை, இன்னும் ஒரு நாள் தான் பெய்யும் எனக் கூறிய வானிலை ஆய்வு மையம், நேற்று காற்று சுழற்சியின் அழுத்தம் காரணமாக, 'மழை, இன்னும் சில தினங்களுக்கு தொடரும்' எனக் கூறி உள்ளது. தமிழகத்தில், கன்னியாகுமரி, நெல்லை, தேனி, நாமக்கல் மாவட்டங்களில் மழை பெய்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, தர்மபுரி - மரகனஹள்ளி, தேனி - பெரியகுளம், 3 செ.மீ., தர்மபுரி - ஒகேனக்கல், கன்னியாகுமரி - குழித்துறை, 2 செ.மீ., ஈரோடு - தாளவாடி, கன்னியாகுமரி - தக்கலை, நீலகிரி - ஊட்டி, தேனி, போடி நாயக்கனூரில், 1 செ.மீ., மழையும் பதிவாகியுள்ளது.

**மதிப்பு கூட்டு பொருள் நிறுவனம் துவங்க கோரிக்கை! மக்காச்சோள விவசாயிகள் எதிர்பார்ப்பு**

**தர்மபுரி**: மக்காச்சோளத்தில் இருந்து மதிப்பு கூட்டு பொருள் தயாரிக்கும் நிறுவனத்தை, தமிழக அரசு துவங்க வேண்டுமென, தர்மபுரி மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயிர்களில், ஒன்றாக மக்காச்சோளம் உள்ளது. பென்னாகரம், பாலக்கோடு, அரூர் உள்பட மாவட்டம் முழுவதும் மக்காச்சோளம், வீரிய ரகங்கள், இறவை பாசன வசதியில், 7,954 ஹெக்டேர், நாட்டு ரகங்கள், 588 ஹெக்டேர் மானாவரியாக சாகுபடி

செய்யப்பட்டுள்ளது.

மூன்று கால பயிரான மக்காசோளத்தை, தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள், இறவை பாசனத்தில் சாகுபடி செய்யவே அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஒரு ஏக்கருக்கு, மூவாயிரம் கிலோ முதல், நான்காயிரம் கிலோ வரை மக்காச்சோளம் மகசூல் கிடைக்கிறது. மாவட்டம் முழுவதும் ஆண்டுக்கு, சராசரியாக, மூன்று கோடியே, 11 லட்சத்து, 26,000 கிலோ மக்காச்சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் உற்பத்தியாகும் மக்காச்சோளத்தை, வியாபாரிகள் தங்களுக்குள் சிண்டிகேட் அமைத்து கொண்டு விலை நிர்ணயம் செய்வதால், மக்காச்சோளத்துக்கு போதிய விலையின்றி, விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து, கம்மாளப்பட்டியை சேர்ந்த விவசாயி சிவராஜ் கூறிதாவது: தர்மபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் பெரும்பாலும் நேரடியாக மக்காச்சோளத்தை கொள்முதல் செய்து வருகின்றனர். இதனால், வியாபாரிகள் தங்களுக்குள், சிண்டிகேட் அமைத்து கொண்டு, விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு மக்காச்சோளத்தை வாங்கி செல்கின்றனர். விவசாயிகள் நேரடியாக மக்காசோளத்தை சந்தைப்படுத்த போதிய வசதி இல்லாததால், தங்களை தேடி வரும் வியாபாரிகளிடம், அவர்கள் நிர்ணயம் செய்யும் விலைக்கு, விவசாயிகள் மக்காச்சோளத்தை விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. கடந்தாண்டு, ஒரு கிலோ மக்காச்சோளம், 15 ரூபாய்க்கு விற்பனை ஆனது. தற்போதும், ஒரு கிலோ மக்காச்சோளத்துக்கு, 15 ரூபாய் முதல், 18 ரூபாய் வரை மட்டும் விலை நிர்ணயம் செய்து, வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். எனவே, தர்மபுரி மாவட்டத்தில், மக்காச்சோளத்தில் மதிப்புக்கூட்டு பொருள் தயாரிப்பு நிறுவனம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

### கோடை மழை அறிகுறி துவக்கம் மாவட்ட விவசாயிகள் நம்பிக்கை

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில் கோடை மழைக்கான அறிகுறி துவங்கி உள்ளதால், சித்திரை பட்டத்தில் பயிர்களை நடவு செய்ய முடியும் என்ற நம்பிக்கை விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், இறவை பாசனத்தில்

நெல், கரும்பு, மஞ்சள், தக்காளி, மரவள்ளி, தென்னை உள்ளிட்ட பயிர்கள் மற்றும் தோட்டக்கலைத்துறை பயிர்கள், மலர்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இதே போன்று, விவசாயிகள் தென்கிழக்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை மற்றும் கோடை மழையில் சித்திரை பட்டத்திலும், பயிர்களை மானாவாரியாகவும், இறவை பாசனத்திலும் பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். கடந்தாண்டு, மாவட்டத்தில் பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்யாததால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், மாவட்டத்தில், கடந்த ஃபிப்ரவரி மாதம் முதல் வெயில் கொளுத்தி வருகிறது. குறிப்பாக, கடந்த மார்ச் மாதம், 20ம் தேதி முதல் வெயிலின் அளவு, 100 டிகிரியை தாண்டி வருகிறது. இதனால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் அவதி அடைந்தனர்.

கடந்தாண்டு, ஏப்ரல் மாதம் கோடை மழை பெய்ததால் வெயிலின் தாக்கம் ஓரளவுக்கு குறைந்ததுடன், சித்திரை பட்டத்தில் பயிர்களை சாகுபடி செய்ய உழவு பணிகளை செய்ய முடிந்ததால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கடந்தாண்டை போல் இந்தாண்டும், கடந்த சில தினங்களாக கோடை மழை, வெறும் சாரலோடு மட்டுமே நின்றதால், விவசாயிகளும், மக்களும் ஏமாற்றம் அடைந்தனர்.

இந்நிலையில், கடந்த, 6ம் தேதி ஒகேனக்கல் மற்றும் பென்னாகரம் பகுதியில் கோடை மழை பெய்ததால், அப்பகுதி மக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தர்மபுரியிலும், சில தினத்துக்கு முன் லேசான மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில், மாரண்ட அள்ளி பகுதிகளில், 33 மில்லி மீட்டர் மழையும், ஒகேனக்கல்லில், 22 மில்லி மீட்டர் மழையும் பெய்தததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், சித்திரை பட்டத்தில் பயிர்களை நடவு செய்ய மாவட்டத்தில் கோடை மழை பெய்யும் என விவசாயிகள் மத்தியில் நம்பிக்கை எழுந்துள்ளது.

## முருங்கை காய் விலை உயர்வு

**வெள்ளகோவில்**: வெள்ளகோவிலில் பிரதிவாரம், வாரச்சந்தை ஞாயிற்று கிழமைகளில் காலை முதல் கூடுகிறது. இங்கு, முருங்கை காய், தேங்காய், தக்காளி

உட்பட அனைத்து காய்கறிகளும் விற்பனை செய்யப்படுகிறது. நேற்று முன்தினம், முருங்கைக்காய்கள், செடி முருங்கை, மரமுருங்கை ஒரு மூட்டை, 800 முதல், 900 ரூபாய் வரை விற்றது. ஒரு கிலோ, 18 முதல், 20 ரூபாய்க்கு விற்றது. கடந்த வாரம் பறிக்கும் கூலிக்கும், சுங்கத்துக்கும் பற்றாத அளவுக்கு மிகக்குறைந்த விலையில், ஒரு கிலோ, மூன்று முதல், ஐந்து ரூபாய் வரை விற்றது. இந்த வாரம் விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த விலையேற்ற, இறக்கம் விவசாயிகளின் ஒட்டு மொத்த வாழ்க்கையை மாற்றியமைக்கிறது. எனவே சரியான விலை அனைத்து நேரங்களிலும் கிடைக்க, எந்த அரசு முருங்கை காய் பவுடர் செய்யும் பேக்டரியை அமைத்து, விவசாயிகளின் இந்த நிலையை மாற்றியமைக்கும் அரசுக்கு ஆதரவளிப்பதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

## வறட்சியால் விளைச்சல் சரிவு; புடலங்காய் விலை அதிகரிப்பு

**தேனி** : வறட்சியால் விளைச்சல் சரிவடைந்துள்ளதால், மார்க்கெட்டில் கிராக்கி ஏற்பட்டு புடலங்காய் விலை, கிலோ 16 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கம்பம் பள்ளத்தாக்கில், உத்தமபாளையம், ராயப்பன்பட்டி, காமயகவுண்டன்பட்டி, சின்னமனூர், ஓடைப்பட்டி, சுருளிப்பட்டி, சீலையம்பட்டி உள்ளிட்ட பல ஊர்களில் பரவலாக புடலங்காய் சாகுபடி செய்யப்படுகிறது.

திராட்சை தோட்டங்களில் புதிய கொடி அமைக்கும் போதும், சீசன் முடிந்த இடைவெளிகளின் போதும் அதில் புடலை கொடி போடுவது வழக்கம்.மற்ற காய்களை ஒப்பிடும் போது விலை குறைவாக இருப்பதால், இதன் பயன்பாடும் அதிகமாக இருக்கும்.

ஆண்டு முழுவதும் விளைச்சலில் இருக்கும் இந்த காயின் வரத்து எப்போதும் சீராக இருக்கும். இந்நிலையில் கடந்த ஆண்டு முழுவதும் மழை பெய்யாததால் இதன் விளைச்சல் மிகவும் குறைந்துள்ளது.

ராயப்பன்பட்டி, அணைப்பட்டி, ஆனைமலையன்பட்டி, சுருளிப்பட்டி, ஓடைப்பட்டி உள்ளிட்ட ஊர்களில் விளைச்சல் குறைந்ததன் காரணமாக, மார்க்கெட்டில் வரத்து குறைந்து விலை உயர்ந்துள்ளது. அனைத்து காய்கறிகளின் விலைகளும் குறைந்துள்ள நிலையில், கடந்த ஒரு வாரமாக புடலங்காய் விலை கிலோ 16க்கு

மேல் விற்பனையானது. இவ்வளவு விலை கொடுத்தாலும், தரமான காய் கிடைப்பதில்லை.

### மீன்பிடி தடை காலம் நள்ளிரவு முதல் அமல்

**சென்னை** : மீன்களை தொந்தரவு செய்யக் கூடாத, 45 நாள் தடைக்காலம், இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வருவதால், கடலுக்குள் சென்ற விசைப்படகுகள் அவசர அவசரமாக கரை திரும்புகின்றன.

தமிழகம், ஆந்திரா, புதுச்சேரி உள்ளிட்ட கிழக்கு கடற்கரை பகுதிகளில் (வங்க கடல்), ஏப்., மே மாதங்கள், மீன்களின் இனவிருத்தி காலமாக கண்டறியப் பட்டுள்ளது.

இந்த நாட்களில், மீன் உள்ளிட்ட கடல் உயிரிகள் முட்டை இட்டு, குஞ்சு பொரித்து இனவிருத்தி செய்யும் என்பதால், மீன் வளத்தை பெருக்கும் நோக்கில், ஏப்., 15 முதல், 45 நாட்கள் மீன்பிடிக்க, அரசு தடை விதித்துள்ளது.

இந்த தடை, இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வருகிறது. இதன் காரணமாக, கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற விசைப்படகுகள் எல்லாம், அவசர அவசரமாக கரை திரும்புகின்றன.

மீன் வரத்து அதிகமாக உள்ளதால், மீன் வகைகளின் விலை வழக்கத்தை விட, 30 சதவீதம் வரை குறைந்து விட்டது.

இன்று நள்ளிரவுக்குள், எல்லா படகுகளும் கரைக்கு திரும்ப வேண்டும்.

இன்று நள்ளிரவு முதல், சென்னையில், 1,300 விசைப் படகுகள் உட்பட, தமிழகம் முழுவதும், 13 ஆயிரம் விசைப் படகுகள், கடலுக்குள் மீன்பிடிக்க செல்லாது; கரையில் ஓய்வெடுக்கும்.

இந்த காலத்தை, விசைப்படகுகளை பராமரிக்கும் காலமாக மீனவர்கள் பயன்படுத்துவர். 'விசைப்படகுகள், இழு வைப் படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை இருந்தாலும், கட்டுமரம், பைபர் படகுகள் மூலம் மீன் பிடிக்க எந்த தடையும் இல்லை.

இதன் வாயிலாக, மீன் வரத்து க0ல், ஒரு பங்கு கூட இருக்காது என்பதால், ஒரு வாரத்தில் மீன் விலை வெகுவாக உயரும்' என, மீனவர்கள் கூறினர்.

## வெங்காயத்துக்கு விலை இல்லை; விவசாயிகள் ஏமாற்றம்

**பல்லடம்** : பல்லடம் பகுதிகளில் சின்ன வெங்காயம் அறுவடை பணி நடந்து வருகிறது. எதிர்பார்த்த விலை கிடைக்காததால், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

திருப்பூர், பல்லடம், பொங்கலூர் பகுதிகளில், 5,000 ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டிருந்தது.

பருவ மழை பொய்த்து, வறட்சி காணப்படும் நிலையில், இருக்கும் குறைந்தளவு நிலத்தடி நீரை கொண்டு, விவசாயிகள், 70 முதல் 100 நாள் பயிரான வெங்காயம் சாகுபடி செய்தனர்.

தற்போது, அறுவடை பணி நடந்து வருகிறது. ஒரு ஏக்கர் வெங்காயம் சாகுபடி செய்ய, 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. வறட்சி காரணமாக இருக்கும், தண்ணீரை கொண்டு குறைந்த பரப்பளவில், சாகுபடி செய்யப்பட்டது.

வறட்சி காரணமாக, வரத்து குறைந்து, கடந்தாண்டு விற்றதைபோல், கிலோ 80 ரூபாய் வரை விலை கிடைக்கும் என எதிர்பார்த்து விவசாயிகள் சாகுபடி செய்திருந்தனர்.

தண்ணீர் பற்றாக்குறை, இடுபொருட்கள் விலை உயர்வு, விலைக்கு தண்ணீர் வாங்கி ஊற்றியது என பல ஆயிரம் ரூபாய் கூடுதலாக செலவு செய்துள்ளனர். ஆனால், எதிர்பார்த்த மகசூல், விலை கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.விவசாயிகள் கூறுகையில், "வெங்காய நாற்று வாங்கியபோது, கிலோ 30 முதல் 45 ரூபாய் வரை விற்றது.

அறுவடை செய்யும்போது, கிலோ 20 ரூபாய்க்கு மட்டுமே விற்கிறது. வழக்கமாக, ஏக்கருக்கு 8 டன் வரை மகசூல் கிடைக்கும்.

வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை காரணமாக ஆறு டன் மட்டுமே கிடைக்கிறது. கர்நாடகா, ஆந்திரா பகுதியில் இருந்து வெங்காய வரத்து இருப்பதால், விலை குறைந்துள்ளது என வியாபாரிகள் கூறுகின்றனர்.

இதனால், வெயிலில் கஷ்டப்பட்டும் பலனில்லை,' என வேதனையுடன் தெரிவித்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பருவ மழை பொய்த்ததால் விளைச்சல் 20% பாதிப்பு மாம்பழ விலை இந்தாண்டு இனிக்குமா?



**புதுடெல்லி**: இந்தியாவில் மாம்பழ உற்பத்தி இந்த ஆண்டு 20 சதவீதம் குறைவாக உள்ளது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் அதிகரிப்பதால் உள்ளூர் சந்தையில் கடந்த ஆண்டுகளை விட மாம்பழத்தின் விலை இந்த ஆண்டு அதிகமாக இருக்கும் என அசோசெம் ஆய்வில் தெரியவந்துள்ளது.

முக்கனிகளில் ஒன்றாக மாம்பழம் இடம்பெற்றுள்ளது. கோடை சீசன் பழமான மாம்பழ வரத்தும் தொடங்குவதால், மாம்பழ விற்பனையும் முதலிடத்தில் இருக்கும். அல்போன்சா, பாதாமி, பங்கனப்பள்ளி, கேசர், ராஸ்புரி, செந்தூரம் உள்ளிட்ட ஏராளமான வகைகள் உள்ளன. உலகம் முழுவதும் 1,300க்கும் மேற்பட்ட மாம்பழ வகைகள் உள்ளன.

இதில் இந்தியாவில் மட்டும் ஆயிரம் வகைகள் உள்ளன. இந்தியாவை பொறுத்தவரை ஆந்திரா, பீகார், குஜராத், மகாராஷ்டரா மற்றும் உத்தர பிரதேச பகுதியில் மூன்றில் இரண்டு பங்கு மாம்பழங்கள் விளைகின்றன.

ஆந்திரா, உத்தர பிரதேச பகுதிகளில் மட்டும் 50 சதவீத மாம்பழங்கள் விளைகின்றன.

இருப்பினும் பருவமழை பொய்த்தது, தட்பவெப்ப சூழ்நிலை போன்ற காரணங்களால் 50 சதவீதத்துக்கும் மாமரங்கள் பாதிக்கப்பட்டன. இதனால்

விளைச்சல் கடந்த ஆண்டான 18 மில்லியன் டன்னில் இருந்து 20 சதவீதம் குறைந்து விட்டது. அதுமட்டுமின்றி, சவுதி அரேபியா, லண்டன், குவைத், வங்கதேசம் மற்றும் பல்வேறு வெளிநாடுகளில் இந்திய மாம்பழத்துக்கு கிராக்கி உள்ளதால் இப்போதே ஆர்டர் கொடுக்க துவங்கிவிட்டனர்.

விளைச்சல் குறைந்த நிலையில் ஏற்றுமதி தேவை அதிகரிப்பதால் உள்ளூர் சந்தையில் வரத்து குறைந்து விடும். எனவே மாம்பழம் விலை உயர்வதை தவிர வேறு வழியில்லை. அசோசெம் நடத்திய ஆய்வின்படி கடந்த 3 ஆண்டுகளில் மாம்பழ ஏற்றுமதி சுமார் 27 சதவீதம் அதிகரித்து வந்துள்ளது. மாம்பழ ஏற்றுமதி கடந்த 2010-11 நிதியாண்டில் ^164கோடியாகவும், 2012-13ம் ஆண்டில் 267 கோடியாகவும் இருந் தது.

இதனால் உள்ளூர் சந்தையில் மாம்பழ விலை உயர்ந்தது. இதுபோலவே இந்த ஆண்டு ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் என்று அசோசெம் கணித்துள்ளது. இந்தியாவில் இருந்து மாம்பழம் இறக்குமதி செய்வதில் ஐக்கிய அரபு நாடுகள்தான் முதலிடத்தில் உள்ளன.

சுமார் 61 சதவீதம் இங்கு ஏற்றுமதியாகிறது. இதற்கு அடுத்ததாக இங்கிலாந்து உள்ளது. உலகில் அதிகம் ருசிக்கப்படும் பழமாக இது உள்ளது. இருப்பினும் இந்த ஆண்டில் மாம்பழ விலை கடந்த ஆண்டை காட்டிலும் 20 சதவீதம் அதிகம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையை பொறுத்தவரை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மாம்பழங்கள் வருகிறது. வழக்கமாக மார்ச் மாத இறுதியில் வரும் மாம்பழங்கள், இந்தாண்டு தாமதமாக வந்துள்ளது. தற்போது 50 டன் மாம்பழம் மட்டும் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வந்துள்ளது.

மே மாதம் கடைசி வாரத்தில் மாம்பழங்களின் வரத்து அதிகமாக இருக்கும். கடந்த ஆண்டு இதே நேரத்தில் பங்கனபள்ளி ரகம் 30க்கு விற்கப்பட்டது. தற்போது 50க்கு விற்பனை செய்யப்படுகிறது. அல்போன்சா ^50 முதல் ^60 வரை விற்பனையானது. தற்போது 70 முதல் 100 வரை விற்கப்படுகிறது என கோயம்பேடு வியாபாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால், சில்லறை விற்பனை கடைகளில் பங்கனப்பள்ளி கிலோ 80 முதல் 90 வரையிலும், அப்போன்சா 120 எனவும் விற்கப்படுகிறது.

**5.2 டன் தேங்காய் பருப்பு 4.96 லட்சத்துக்கு ஏலம்**



**ஜலகண்டாபுரம், ஏப்.16:** சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் உள்ள வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில் 5.2 டன் தேங்காய் பருப்பு 4.96 லட்சத்திற்கு விற்பனையானது. சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க கொங்கணாபுரம் கிளை சேவை மையம் உள்ளது. இங்கு நேற்று தேங்காய் பருப்பு ஏலம் நடந்தது. விவசாயிகள் 106 மூட்டையில் 5,253 கிலோ தேங்காய் பருப்பு கொண்டு வந்திருந்தனர். கடந்த வாரம் குறைந்தபட்சமாக கிலோ 92.85 ரூபாய்க்கும், அதிகபட்சமாக 96.95 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது. இந்த வாரம் குறைந்தபட்சமாக கிலோ 95.15 ரூபாய்க்கும், அதிகபட்சமாக கிலோ 100.30 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது. 4,96,000 ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றது. சென்ற வாரத்தை விட இந்த வாரம் சராசரியாக கிலோவுக்கு ரூபாய் 3.35 அதிகம் கிடைத்தது.

**தேர்தல் கெடுபிடி: புளி விலை குறைவு**



**சேலம்**: மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்கள் புளி சீசன். இந்நிலையில் கடந்த ஒரு வாரத்தில் சேலம் மார்க்கெட்டில் புளி விலை கிலோவிற்கு ^3 வரை குறைந்துள்ளது. இதுகுறித்து புளி வியாபாரிகள் கூறுகையில், 'தேர்தல் கெடுபிடிகளால் வியாபாரிகள் பணத்தை கொண்டு வந்து சரக்கு கொள்முதல் செய்ய அச்சப்படுகின்றனர். இதனால் புளி விற்பனை குறைந்துள்ளது. மேலும் சீசன் என்பதால் மார்க்கெட்டிற்கு வரத்தும் அதிகரித்து வருகிறது. 40 கிலோ பண்டல்கள் 5000 வரை அதிகரித்துள்ளது. தற்போது தோசைப்புளி கிலோ ^50 முதல் ^60 வரையும், கரிப்புளி கிலோ 75 முதல் 95 வரையும் விற்கப்படுகிறது.

**கோழிகளுக்கு குளிர்ந்த நீர் கொடுக்கவேண்டும் வானிலை மையம் ஆலோசனை**

**நாமக்கல்**, : வெப்ப அயற்சி நோய்களை தடுக்க கோழிகளுக்கு குளிர்ந்த நீரை கொடுக்க வேண்டும் என வானிலை மையம் யோசனை தெரிவித்துள்ளது. நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வரும் 3 நாட்களுக்கான வானிலை அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன் விபரம்:

தற்போது நிலவும் லேசான மேகமூட்டத்தின் காரணமாக அதிகபட்ச பகல் நேர வெப்ப நிலை 39 சென்டிகிரேடாக இருக்க வாய்ப்பு உள்ளது. இதனால் கோழிகளில் வெப்ப அயற்சி ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே தொடர்ந்து வெப்ப அயற்சியை குறைக்கவல்ல வைட்டமின் சி மற்றும் எலக்ட்ரோலைட்ஸ் மருந்துகளை தீவனத்தில் சேர்ந்து வரலாம். குளிர்ந்த குடிநீர் நாள் முழுவதும் கோழிகளுக்கு கிடைக்குமாறு பார்த்து கொள்ளவேண்டும்.

கோடைக்காலத்தில் தற்போது பரவலாக மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. மழைக்கு பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்கு செல்லும் ஆடுகளுக்கு துள்ளுமாரிநோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே எல்லா வயது ஆடுகளையும் இந்த நோய் பாதிப்பதை விட இளம் வயது ஆடுகளையே பெரும்பாலும் பாதிக்கின்றன. இதை தடுக்க சூரிய உதயத்துக்கு 2 மணி நேரத்துக்கு பின் ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டும். பருவமழைக்கு முன் தடுப்பூசி போடுதல் அவசியம்.

நாமக்கல் மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதால், மானாவாரி விவசாயிகள் தங்கள் வயலுக்கு எரு எட்டு ஓரிரு உழவை மேற்கொள்ளலாம்.

கிடைக்கும் மழைநீரை தற்காலிகமாக நீர்நிலைகளை சரி செய்து சேகரிப்பதன்மூலம் பயிர் வளர்ச்சி நிலையில் நீர்பாசனம் செய்ய வசதியாக இருக்கும்.இவ்வாறு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பி.மோட்டுப்பட்டி அருகே மழையில்லாததால் காய்ந்து போகும் தக்காளி செடிகள்**

**தர்மபுரி**, : தர்மபுரி அருகே, போதிய மழையில்லாததால் தக்காளி செடிகள் காய்ந்து போகும் பரிதாப நிலை உள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் பாலக் கோடு, புலிகரை, சோகத்தூர், சோமனஅள்ளி, மாங்கரை, பென்னாகரம், அன்னசாகரம், எட்டிமரத்துப்பட்டி, தொப்பூர், முக்கல்நாயக்கன்பட்டி, லளிகம், திப்பம்பட்டி, ஏ.முருக்கம்பட்டி, பந்தாரஅள்ளி, பி.மோட்டுப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் தக்காளி பயிரிடப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் நடப்பாண்டில் கோடை மழையின்றி வறட்சி ஏற்பட்டுள்ளது. அன்னசாகரம், ராமாக்காள், லளிகம், நார்த்தம்பட்டி, இலக்கியம்பட்டி, பைசுஅள்ளி ஏரி உள்பட அனைத்து ஏரிகளும் முற்றிலும் வறண்டுவிட்டது. கடும் வறட்சியால் ஆழ்துளை கிணறுகளிலும் நீர் வறண்டுவிட்டது. இதனால் பாலக்கோடு, காரிமங்கலம், பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாக உள்ளது. மானாவாரி பயிர்களை பயிரிடுவதற்கு விவசாயிகள் மழைக்காக காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் திப்பம்பட்டி அருகே பி.மோட்டுப்பட்டியில் பயிரிடப்பட்டுள்ள தக்காளி செடிகளுக்கு போதிய தண்ணீர் பாய்ச்ச முடியாமல் வாடி வதங்கி கிடக்கின்றன. இது குறித்து விவசாயிகள் கூறும் போது, இப்பகுதியில் தக்காளி, பருத்தி, மா ஆகியவை பயிரிடப்படுகிறது. எங்கள் பகுதி முழுவதும் பல விவசாய கிணறுகளில் தண்ணீர் வறண்டுவிட்டது. ஆழ்துளை கிணறுகளிலும் பலநூறு அடிக்கு கீழே தண்ணீர் சென்றுவிட்டது.

ஆழ்துளை கிணறுகளில் மோட்டார் மணிக்கணக்கில் ஓடுகிறது. இதனால் தக்காளி செடிக்கு தண்ணீர் ஊற்ற வழியில்லை. இதன் காரணமாக னால் தக்காளி செடிக்கு தண்ணீர் இன்றி காய்கள் பறிக்கப்படாமலேயே வாடி வதங்கி கிடக்கிறது என்றனர்.

**ஏற்காட்டில் தொடர் மழை காபி விவசாயிகள் மகிழ்ச்சி**

**ஏற்காடு,** : ஏற்காட்டில் பெய்து வரும் தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஏற்காடு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வெயில் கொளுத்தி வந்த நிலையில், கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று பிற்பகல் 3.30 மணி முதல் 4 மணி வரை சுமார் அரை மணி நேரம் ஏற்காடு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நல்ல மழை பெய்தது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் காபியில் கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். பகல் நேரத்தில் பெய்யும் மழையால் மொட்டு அரும்புகள் முழுவதும் மலர்வதற்கான நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறினர்.

இதேபோல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று மழை பெய்தது. நீண்ட நாட்களாக மக்களை ஏமாற்றி வந்த சங்ககிரி பகுதியில் நேற்று மழை பெய்தது. இதனால், வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியதால் மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர். ஆத்தூர், வாழப்பாடி, இடைப்பாடி, ஓமலூர், நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், மேட்டூர் உள்ளிட்ட இடங்களில் மழை வருவதற்கான அறிகுறியுடன் லேசான தூறல் போட்டது. ஆனால், மழை பெய்யாததால் மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

**வரத்து அதிகரிப்பால் விற்பனையாகாமல் அழுகும் பெரிய வெங்காயம்**

**பொள்ளாசி,** : பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டுக்கு கர்நாடக, ஆந்திர, மகாராஷ்ட்ரா உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தே பெல்லாரி வெங்காயம் என்னும் பெரிய வெங்காயம் அதிகமாக விற்பனைக்கு கொண்டுவரப்படு கிறது. மேலும் தமிழகத்தில் திருப்பூர், கரூர், சேலம் என குறிப்பிட்ட மாவட்டங்களில் இருந்தும் வருகிறது. பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு இறக்குமதியாகும் பெல்லாரி வெங்காயத்தில் சுமார் 70 சதவீதம் கேரள மாநிலத்துக்கு அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு முறையும் பெல்லாரி வரத்தை பொறுத்து அதன் விலை நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது, கர்நாடக மற்றும் ஆந்திர மாநிலங்களில் பெல்லாரி வரத்து குறைந்தாலும், மகாராஷ்ரா மாநிலமான அகமத்நகர், பூனே, நாசிக், சோம்பூர் உள்ளிட்ட பகுதிகளில் விளைச்சல்

அதிகரிப்பால், கடந்த பிப்ரவரி மாதம் முதல் வரத்து அதிகரித்துள்ளது. தினமும் சுமார் 3 ஆயிரம் டன் ªபெல்லாரி பொள்ளாச்சி மார்க்கெட்டில் இறக்குமதியாகிறது. கடந்த ஒரே மாதத்தில், சுமார் 75ஆயிரம் டன் பெல்லாரி வெங்காயம் கொண்டுவரப்பட்டுள்ளது. பெல்லாரி வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த 2 மாதத்திற்கு முன்பு கிலோ ரூ.40 வரை விற்பனையான பெல்லாரி, தற்போது முதல் தரம் ஒருகிலோ ரூ.15க்கும், இரண்டாம் தரம் ரூ.13க்கும் விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை வியாபாரிகள் ரூ.2 அல்லது ரூ.3 அதிகரித்து விற்பனை செய்கின்றனர். இந்நிலையில் பெல்லாரி வரத்து நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், எதிர்பார்த்த அளவிற்கு விற்பனையாகாமல் அவை தேக்கமடைகிறது. மேலும், தேக்கமடைந்த பெல்லாரிகள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்படி, நகரில் பல கடைகளில் தேக்கமடைந்து அழுகிய பெல்லாரிகளை ரோட்டோரம் கொட்டி செல்வதாக கூறப்படுகிறது. நல்லூரில் இருந்து ஜமீன்ஊத்துக்குளி செல்லும் ரோட்டோரம் அழுகிய பெல்லாரிகள் அதிகளவு கொட்டப்பட்டுள்ளதை காணமுடிகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கடந்த நிதி ஆண்டில், நிலுவையில் உள்ள உர மானிய தொகை ரூ.30,000 கோடி**



**புதுடெல்லி,**

மத்திய அரசு, கடந்த நிதி ஆண்டில் (2013–14) உர நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய மானியத்தில் ரூ.30 ஆயிரம் கோடி நிலுவையில் உள்ளது.

முந்தைய நிதி ஆண்டிலும் (2012–13) பாக்கி தொகை இந்த அளவிற்குத்தான் இருந்தது. அதில் 2011–12–ஆம் நிதி ஆண்டின் நிலுவைத் தொகையிலிருந்து சேர்க்கப்பட்ட ரூ.22,000 கோடியும் அடங்கும்.

**யூரியா இறக்குமதி**

கடந்த 2012–13–ஆம் நிதி ஆண்டில் 80.40 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டது. சென்ற ஆண்டில் இறக்குமதி 12 சதவீதம் குறைந்து 70.80 லட்சம் டன்னாக குறைந்தது.

உர மானிய நிலுவை தொகை அதிகரிக்காததற்கு இது ஒரு முக்கிய காரணம்.

குறித்த காலத்தில் மானியம் வழங்கப்படாததால் உர நிறுவனங்களுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு மத்திய அரசு சிறப்பு வங்கி ஏற்பாடு ஒன்றின் கீழ் உர நிறுவனங்களுக்கு கடன் வசதி செய்யப்பட்டிருந்தது. சென்ற நிதி ஆண்டில் இதன்படி இரண்டு முறை ரூ.5,500 கோடி அளவிற்கும், ஒரு முறை ரூ.9,000 கோடிக்கும் கடன் பெற வகை செய்யப்பட்டிருந்தது. மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய மானிய தொகைக்கு தற்காலிக மாற்று ஏற்பாடாக இத்திட்டம் அமைந்திருந்தது.

**பாஸ்பேட் – பொட்டாஷ்**

சென்ற ஆண்டில் ஜூலை மாதம் வரை மானியம் வழங்கியதுடன் 2013–14 முழு நிதி ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட யூரியா உர மானியத் தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

அதுபோல் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்களுக்கு ஒதுக்கப்பட்ட மானியம் அந்த ஆண்டு டிசம்பருடன் காலியாகி விட்டிருந்தது.

**உற்பத்தி குறைந்ததால் மாம்பழம் விலை உயரும்**



**புதுடெல்லி,**

நாடு முழுவதுமாக இந்த ஆண்டில் மாம்பழம் உற்பத்தி 20 சதவீதம் வரை குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் மாம்பழம் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. சில மாநிலங்களில் பருவம் தவறிப் பெய்த மழையால் மாம்பழத் தோட்டங்கள் பாதிப்புக்குள்ளாயின. எனவே உற்பத்தி குறைந்து மாம்பழம் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என அசோசெம் அமைப்பு தெரிவித்துள்ளது.

**ஏற்றுமதி ஆர்டர்கள்**

ஐக்கிய அரபு நாடுகள், இங்கிலாந்து, சவூதி அரேபியா, கத்தார், குவைத், வங்காளதேசம் மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து மாம்பழம் ஏற்றுமதி ஆர்டர்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஏற்றுமதி வாய்ப்புகள் அபாரமாக உள்ளதால் உள்நாட்டில் சப்ளை குறையும். இதன் காரணமாகவும் மாம்பழம் விலை அதிகரிக்கலாம் என அசோசெம் தெரிவித்துள்ளது. அசோசெம் அமைப்பின் பொது செயலாளர் டீ.எஸ். ராவத் இது குறித்து கூறும்போது, ‘‘கடந்த ஆண்டு சீசனில் 1.80 கோடி டன் மாம்பழம் விளைந்தது. இந்த ஆண்டில் விளைச்சல் 15 முதல் 20 சதவீதம் வரை சரிவடைய வாய்ப்புள்ளது. மேலும் நடப்பாண்டில் மாம்பழம் ஏற்றுமதியும் கூட குறைந்த அளவில்தான் இருக்கும்’’ என்று தெரிவித்தார். ஆந்திரா, பீகார், குஜராத், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் எதிர்பாராத மழையால் 50 சதவீத மாமரங்கள் சேதமடைந்தன. நாட்டின் மொத்த மாம்பழ உற்பத்தியில் இந்த மாநிலங்களின் பங்கு 66 சதவீத அளவிற்கு உள்ளது.

இதனால் கணிசமான அளவு மாம்பழங்களும் சேதமாகி விட்டன. இந்த ஐந்து மாநிலங்களிலிருந்து சந்தைகளுக்கு வரும் மாம்பழங்கள் குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைந்து விடும் நிலை உள்ளது. இது விலை ஏற்றத்திற்கு வழி வகுக்கும் என அசோசெம் ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.

**முக்கிய சந்தைகள்**

2012–13–ஆம் நிதி ஆண்டில் ரூ.267 கோடிக்கு மாம்பழம் ஏற்றுமதி ஆகியுள்ளது. 2010–11–ல் ஏற்றுமதி ரூ.164 கோடிக்கு நடைபெற்றது. ஆக, மூன்று ஆண்டுகளில் மாம்பழம் ஏற்றுமதி 27 சதவீதம் உயர்ந்துள்ளது.

இந்திய மாம்பழங்களுக்கு முக்கிய சந்தையாக ஐக்கிய அரபு நாடுகள் உள்ளன. மொத்த மாம்பழம் ஏற்றுமதியில் அந்த நாடுகளின் பங்கு 61 சதவீதமாக உள்ளது. அடுத்து இங்கிலாந்து மற்றும் சவூதி அரேபியாவிற்கு அதிக அளவு மாம்பழங்கள் ஏற்றுமதியாகின்றன.

**மீன்பிடி தடைக்காலம் தொடங்கியதால் கடலுக்கு செல்லாமல் வலை பின்னும் பணியில் ஈடுபட்டுள்ள மீனவர்கள்**



**மாமல்லபுரம்,**

மீன்பிடி தடைகாலம் தொடங்கியதால் கடலுக்கு செல்லாமல் வலை பின்னும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

<u>மீன்பிடி தடைகாலம்</u>

ஏப்ரல் மாதம் 15–ந் தேதி முதல் மே மாதம் 29–ந் தேதி வரை 45 நாட்கள் மீன்களின் இனப்பெருக்க காலம் என்பதால் விசைப்படகு, பைபர் படகு மீனவர்களுக்கு கடலில் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரம் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள தேவனேரி குப்பம், கொக்கிலமேடு குப்பம், வெண்புருஷம் குப்பம், புதுஎடையூர்குப்பம், பட்டிபுலம்குப்பம் உள்பட 30 மீனவ கிராமங்களில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான படகுகளில் மீனவர்கள் தினமும் கடலுக்கு சென்று வந்தனர்.

<u>வலைகள் சீரமைப்பு</u>

நேற்று முதல் மீன்பிடி தடைக்காலம் தொடங்கியதையடுத்து அனைத்து படகுகளும் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தற்போது மீனவர்கள் கடலுக்கு செல்லாததால் தங்கள் நேரத்தை வீணாக்காமல் உடைந்த படகுகளை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் பெரும்பாலான மீனவர்கள் புதிய வலைகள் பின்னும் பணியிலும், அறுந்த பழைய வலைகளை சீரமைக்கும் பணியிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**வாழையில் ஊடுபயிராக சின்ன வெங்காயம் சாகுபடி**



**சுல்தான்பேட்டை,** சுல்தான்பேட்டை ஒன்றிய பகுதியில் வாழையில் ஊடுபயிராக விவசாயிகள் சின்ன வெங்காயம் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**போதிய வருவாய் இல்லை**

சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. தற்போது விவசாயத்தில் சொல்லிக் கொள்ளும்படி போதிய வருவாய் விவசாயி களுக்கு கிடைப்பதில்லை.

இதன் காரணமாக பல விவசாயிகள் விவசாயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு கோழிப்பண்ணைகள் அமைத்தல், நிதி நிறுவனம் நடத்துதல், நிலங்களை வாங்கி விற்பனை செய்தல் போன்ற பல்வேறு தொழில்களுக்கு மாறி விட்டனர்.

விவசாயம் அடிக்கடி கை கொடுக்க மறுத்தாலும் விவசாயத்தை விட்டு வெளியே வர விரும்பாத விவசாயிகள் விவசாய தொழி லில் ஏற்படும் நஷ்டத்தை தவிர்க்க புதுமையாக சிந்தித்து வருகின் றனர்.

**சின்ன வெங்காயம் சாகுபடி**

அதில் ஒரு கட்டம் வறட் சியை தாக்குபிடித்து வளரும் நெல்லி சாகுபடி, புளியமரங்கள் வளர்த்தல் இது ஒரு யுக்தியாக உள்ளது.

மற்றொரு யுக்தியாக விவசாயிகள் தற்போது மேற் கொண்டு வருவது 10 மாத அறுவடை பயிரான வாழை களுக்கு இடையே காலியாக உள்ள இடத்தில் 4 மாத பயிரான சின்ன வெங் காயம் சாகுபடி செய்வது தான்.

இதன் மூலம் குறுகிய நிலத்தில் காலியிடத்தில் தண்ணீரிலேயே வெங்காயம், வாழை சாகுபடி செய்து லாபம் பார்ப்பது தான்.

ஒரே நேரத்தில் இரு பயிர்களை சாகுபடி செய்வதால் ஒன்று நஷ்டத்தை கொடுத்தாலும் மற்றொன்று லாபத்தை ஈட்டி தரும் என விவசாயிகள் நம் பிக்கை தெரிவிக்கின்றனர்.

**கடலூரில், மீன்பிடி வலைகள் சீரமைக்கும் பணியில் மீனவர்கள் தீவிரம்**



**கடலூர்முதுநகர்,**

மீன்பிடி தடை காலம் தொடங்கியதையடுத்து, கடலூரில் மீன்பிடி வலைகள் மற்றும் படகுகளை சீரமைக்கும் பணியில் மீனவர்கள் ஈடுபட தொடங்கி உள்ளனர்.

**மீன்பிடி தடை காலம்**

கடலூர் துறைமுகத்தில் இருந்து நாள்தோறும் சோனாங்குப்பம், அக்கரைக்கோரி, சிங்காரத்தோப்பு, தேவனாம்பட்டினம் ஆகிய மீனவ கிராமங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் சுமார் 100-க்கும் மேற்பட்ட விசை மற்றும் பைபர் படகுகளில் ஆழ்கடலுக்கு சென்று மீன்பிடித்து வருவது வழக்கம். ஆண்டுதோறும் மீன்களில் இனப்பெருக்கத்திற்காக ஏப்ரல் 15-ந் தேதி முதல் மே மாதம் 29-ந் தேதி வரை 45 நாட்கள் மீன்பிடி தடை காலம் இருந்து வருகிறது. அதன்படி இந்த ஆண்டிற்கான மீன்பிடி தடைகாலம் நேற்று தொடங்கியது. இந்த மீன்பிடி தடை காலத்தையொட்டி மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாமல், தங்கள் வலைகளை சீரமைப்பது, படகுகளை பராமரிப்பது போன்ற பணிகளில் ஈடுபடுவர்.

**படகுகள் சீரமைக்கும் பணி**

அதன்படி நேற்று தடை காலம் தொடங்கியதால் கடலூர் தேவனாம்பட்டினம், தாழங்குடா, சோனங்குப்பம், அக்கரைக்கோரி, ராசாப்பேட்டை, சித்திரைப்பேட்டை உள்பட 25-க்கும் மேற்பட்ட கடலோர பகுதி மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. அவர்கள் தங்கள் படகுகளை கடலூர்

துறைமுகம், தேவனாம்பட்டினம், தாழங்குடா ஆகிய பகுதிகளில் கடற்கரையோரம் நிறுத்தி வைத்துள்ளனர். தொடர்ந்து தங்கள் மீன்பிடி வலைகளை சீரமைத்தல், படகுகளை பழுது பார்த்தல், என்ஜின், படகில் உள்ள சேதமடைந்த பலகைகளை மாற்றுதல் போன்ற பணிகளை தொடங்கி உள்ளனர். படகுகளில் உள்ள சிறு, சிறு பராமரிப்பு பணிகளை முடித்த பிறகு, வர்ணம் பூசி, 45 நாட்கள் தடை காலம் முடிந்த பிறகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்வார்கள்.இது பற்றி மீனவர் ஒருவர் கூறுகையில், மீன்பிடி தடை காலம் தொடங்கி இருப்பதால் எங்களுடைய மீன்பிடி வலைகள், படகுகளை சீரமைத்து வருகிறோம். இருப்பினும் இந்த நாட்களில் ஆறுகளில் இருந்து பிடிக்கப்படும் மீன்கள் அதிக அளவில் விற்பனைக்கு வரும். ஆனால் இவற்றின் விலையும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்றார்.

**குறைந்த காலத்தில் அதிக மகசூல் கம்பு சாகுபடிக்கு மாறிவரும் சின்னமனூர் விவசாயிகள்**



**சின்னமனூர்,**

குறைந்த காலத்தில் அதிக மகசூல் கிடைப்பதால் கம்பு சாகுபடிக்கு சின்னமனூர் விவசாயிகள் மாறி வருகின்றனர்.

<u>கம்பு சாகுபடி</u>

தேனி மாவட்டம் சின்னமனூர் பகுதியில் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவில் கம்பு பயிரிடப் பட்டு உள்ளது. சின்னமனூர், சீலையம்பட்டி, அய்யம்பட்டி,

மார்க்கையன்கோட்டை, காமாட்சிபுரம், ஓடைபட்டி மற்றும் சீப்பாலக்கோட்டை பகுதிகளில் கம்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற் போது தண்ணீர் பற்றாக்குறை காரனமாக விவசாயிகள் மாற்று விவசாயத்தில் இறங்கி யுள்ளனர். குருகிய காலத்தில் மகசூல் கிடைப்பதால் விவசாயிகள் கம்பு சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். தண்ணீர் தேவை குறைவு, சாகுபடி செய்து 60 முதல் 70 நாட்களில் மகசூல் கிடைத்துவிடுவதால் விவசாயிகள் பயன் அடை கின்றனர். ஒரு ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் செலவு செய்து கம்பு பயிரிட்டால், ரு.12 ஆயிரம் வரை வருமானம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## மாட்டு தீவனம்

குறைந்த காலத்தில் நிறைந்த லாபம் கிடைப்பதால் கம்பு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மேலும் கம்பு தட்டைகள் மாட்டு தீவனமாக பயன்படுவ தால் எந்த பொருளும் வீண் ஆவதில்லை என்று தெரிவிக் கின்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, கம்பு பயிரிட்டு அறுவடை செய்த பின் எந்த பொருளும் வீணாவது இல்லை. விற்பனை செய்து முழு பயனை பெறுவது மகிழ்ச்சியாக உள்ளது. குறைந்த செலவில் அதிக அளவு வருமானம் கிடைப்பதால் கம்பு பயிர் செய்துள்ளோம் என தெரிவித்தனர்.

## விசைப்படகுகளின் மீன்பிடி தடைக்காலம் தொடங்கியது மீனவர்கள் படகு, வலைகளை சீரமைத்தனர்



**தூத்துக்குடி,**

தூத்துக்குடி மாவட்டத்தில் விசைப்படகுகளின் மீன்பிடி தடைக்காலம் நேற்று முதல் தொடங்கியது.

தடைக்காலம்

தமிழ்நாட்டில் ஏப்ரல், மே மாதங்கள் மீன்களின் இனப்பெருக்க காலமாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த நாட்களில் அதிக அளவில் மீன்கள் பிடிப்பதால் மீன்வளம் குறைந்து வந்தது.

இதனால் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு கடற்கரை பகுதிகளில் மீன்களின் இனப்பெருக்க காலமான ஏப்ரல் மாதம் 15–ந் தேதி முதல் மே மாதம் 29–ந் தேதி வரை 45 நாட்கள் மீனவர்கள் மீன்பிடிக்க அரசு தடை விதித்து வருகிறது. இந்த ஆண்டு நேற்று முதல் விசைப்படகுகள் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது.

பழுதுநீக்கும் பணி

இந்த தடையையொட்டி தூத்துக்குடியில் உள்ள சுமார் 250 விசைப்படகுகளும் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன. இதனால் நேற்று மீனவர்கள் தங்கள் படகுகளில் உள்ள சிறு சிறு பழுதுகளை சரிபார்க்கும் பணியை தொடங்கினர்.

அதே போன்று வலைகளில் ஏற்பட்டு உள்ள சேதங்களையும் சீரமைத்தனர். இந்த தடைக் காலத்தில் நாட்டுப்படகு மீனவர்கள் மட்டும் கடலுக்கு மீன்பிடிக்க செல்வதால் மீன்களின் வரத்து குறைந்து காணப்படும். இதனால் மீன்களின் விலை உயர வாய்ப்பு உள்ளது.